## தாய்மொழியை வீட்டில் உபயோகிப்பதற்கு பத்து குறிப்புகள்

1) ***பேசுதல்*** *– வீட்டில் தங்கள் தாய்மொழியில் அல்லது மொழிகளில் பேச வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் தாய்மொழியில் இயன்றவரை பேசுவதற்கு ஊக்கப்படுத்தவேண்டும்.*

2) ***விளக்கிக் கூறல்*** *– தங்கள் தாய் மொழியில் உள்ள பழங்கதைகள், கவிதைகள், பழமொழிகள் மற்றும் வேடிக்கை பாடல்களை குழந்தைகளுக்கு சொல்லிக்கொடுங்கள். தங்கள் குடும்பத்தைப் பற்றியும், அதன் வரலாறு மற்றும் பண்பாடு பற்றியும் கூறுவதோடுஅதுபற்றி, அவர்களை பேச வையுங்கள்.*

3) ***எழுத பழக்குதல்*** *– உங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுக்கு கடிதங்கள், வாழ்த்து(அட்டைகள்) ச்செய்திகள், மின்னஞ்சல், குறுஞ்செய்திகள் மற்றும் சமூக ஊடகங்களில் உங்கள் தாய் மொழியில் எழுதுங்கள்.  முடிந்தவரையில்  அவர்களை அவ்வப்பொழுது சென்று பார்ப்பதற்கு பயண ஏற்பாடுகள் செய்க.*

4) ***வாசித்தல்*** *– நாள்தோறும் உங்கள் குடும்பத்தினரோடு சேர்ந்து உங்கள் தாய் மொழியில் உள்ள  நூல்களை வாசியுங்கள். அதில் உள்ள படங்களை காண்பித்து விளக்கிக்கூறுவதோடு, அனைத்து அல்லது சில சொற்களை வாசித்து காட்டுங்கள். முடிந்தவரை இரு-மொழி நூல்களையும் பயன்படுத்துங்கள்.*

5) ***காண்க*** *– தங்கள் தாய்மொழியில் நிகழ்ச்சிகள், திரைபடங்கள் மற்றும்  காணொளி காட்சிகள் அனைத்தையும் தொலைக்காட்சி வாயிலாகவும், மற்றும்  இணையத்திலோ அல்லது நூலகத்தின் வாயிலாகவோ குடும்பத்துடன் காணவும். முடிந்தவரை ஆங்கில சுருக்கதலைப்புடன் கூடிய படங்களையும் தேர்ந்தெடுக்கலாம்.*



6) ***உதவுதல்*** *– பள்ளிக்கூடம், பொது அமைப்புகள்,வழிபாட்டுத் தலங்களான கோவில், தேவாலயம் மற்றும் மசூதியில் தரும் வீட்டுப்பாடத்தினை தாய்மொழியில் செய்வதற்கு-எழுதுவதற்கு உங்கள் குழந்தைகளுக்கு உதவுங்கள்.*

7) ***பாடுதல்*** *– உங்கள் குழந்தைகளுடன் தாய் மொழியில் பாடிப்பழகுங்கள்.*

8) ***விளையாடுதல்*** *– மரபார்ந்த கேளிக்கை விளையாட்டுகள் மற்றும் பாடல்களை உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன்  உங்கள் தாய்மொழியில் பாடி விளையாடுங்கள்.*

9) ***பார்வைக்கு வைத்தல்*** *- தங்கள் தாய் மொழியில் விளக்கப்படங்கள், எழுத்துருக்கள் மற்றும் வரைபடங்களை வீட்டில் பார்வையில் படும்படி வைக்கவும்.*

10) ***விளக்குங்கள்*** *– உங்கள் குழந்தைகளிடம் ஒரே சமயத்தில்  இரண்டு அல்லது மேற்பட்ட மொழிகள் மற்றும் கலாச்சாரங்களில் சிறந்து விளங்கமுடியுமென்பதை விளக்கிக்கூறுங்கள்.*

## நினைவில் கொள்க:

1) *உங்கள் வீட்டில் தாய்மொழியில் – மொழிகளில் பேசிப்பழகுவது, உங்கள் குழந்தைகள் பள்ளிக்கல்வி மற்றும் எதிர்கால வேலைவாய்ப்பில் வெற்றியடைய உதவுகிறது.*

2) *உங்கள் குழந்தைகள் பலமொழிகளை கலந்து பேசுவதை ஏற்றுக்கொள்ளுங்கள் தவறாகப் பார்க்கவேண்டாம்*

3) *உங்கள் குழந்தைகள் தாய் மொழியினை பேச - பயன்படுத்த மறுத்தால் நீங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அவர்களின் ஆசிரியர்களிடம் ஆலோசனை/ உதவி கேட்க தயங்க வேண்டாம்.*

4) *உங்கள் குழந்தைளுக்கு தாய்மொழியினை குழுவினருடனோ அல்லது இணைந்து கொண்டாடப்பெறும் சமுதாய நிகழ்வுகளிலோ கற்பிப்பது சுலபமானது. அவர்கள் மொழியை அறிந்து கொள்வதற்கும், பேசத் தொடங்குவதற்கும், உங்கள் தாய்மொழி வழி செயல்படும்  விளையாட்டுக்குழு,  கலாச்சாரக்குழு - சமூக செயல்பாட்டுக்குழு, பள்ளிக்கூடம் மற்றும் உள்ளூர் பொது அமைப்புகள் ஆகியவற்றுடன் குடும்பத்துடன் இணைந்து செயல்படவும்.*

*மேலும் தகவல் அறிந்து கொள்ள அல்லது வேற்று மொழியில் தகவிறக்கம் செய்து கொள்ள கீழ்க்கண்ட இணையமுகவரிக்கு செல்லவும் : [www.facebook.com/CommunityLanguagesAssociationNZ/](http://www.facebook.com/CommunityLanguagesAssociationNZ/)*

Community Languages Association of New Zealand (CLANZ)

English text by Hilary Smith, illustration by Sarah Illingworth. © 2017 CLANZ Translated by: Meenakshi Sivaganesan & Naren Selvaraj